மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

முன்னிலை :- **திருமதி. சி. கலைவாணி**, B.A., L.L.B.,

மாவட்ட உரிமையியல் நீதிபதி.

2021 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 28 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை

திருவள்ளுவராண்டு 2052 ஸ்ரீ பிலவ வருடம் புரட்டாசித் திங்கள் 12 ஆம் நாள்

**இடைநிலை மனு எண். 134/2021 -ல்**

**அசல் வழக்கு எண். 104/2017**

பட்டாணி ...வாதி/இப்பால் இறந்தார்

1. சுந்தராம்பாள்
2. செந்தில்குமார்
3. சிவக்குமார்
4. ராஜலெட்சுமி ...மனுதாரர்கள்/இறந்த வாதியின் வாரிசுகள் /அசல் வழக்கில் 2 முதல் 5 வாதிகளாக சேரக்கப்படவேண்டியவர்கள்

// **எதிர்**//

1. கருணாநிதி
2. ஜோதி
3. பவானி ....எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு 15.09.2021ம் தேதியன்று என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. S. உதயகுமார் அவர்களும், 1,2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர்கள் திரு. S. விஜயன், திரு. K. சிவசுந்தர், திரு. R.கண்ணதாசன் ஆகியோர்கள் முன்னிலையாகியும், 3 ம் எதிர்மனுதாரர் அசல் வழக்கில் ஒருதலைப்பட்சமாக்கப்பட்டும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று வரை என் பரிசீலணையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**உத்தரவு**

இம்மனுவானது அசல் வழக்கில் வழக்கிடையில் இறந்துபோன வாதிக்கு 90

நாட்களுக்குள் வாரிசு மனு கொடுக்காததால் ஏற்பட்டுள்ள அபேட்மெண்ட் உத்தரவை ரத்து செய்து உத்தரவிடக்கோரி உ.ந.ச. கட்டளை 22 விதி 9-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>மனுவின்</u> <u>சுருக்கம்</u> :-

இம்மனுவின் மனுதாரர் 2ம் மனுதாரர் ஆவார். 1ம் மனுதாரர் 2ம் மனுதாரரின் தாயார் ஆவார். 3,4 மனுதாரர்கள் 2ம் மனுதாரரின் உடன்பிறந்த சகோதர, சகோதரிகள் ஆவார்கள். அசல் வழக்கானது நிலுவையிலிருக்கும்போது 2ம் மனுதாரரின் தகப்பனார் பட்டாணி 08.03.2019ம் தேதியன்று காலமாகிவிட்டதால், அவரது மனைவியான சுந்தரம்பாள், 2ம் மனுதாரர் மற்றும் 3,4 மனுதாரர்கள் ஆகியோர்கள் சட்டப்படி வாரிசுகள் ஆவார்கள். இவர்களை தவிர வேறு வாரிசுகள் யாரும்கிடையாது. எனவே, இந்த அசல் வழக்கிடையில் இறந்துபோன வாதி பட்டாணிக்கு வாரிசுகளாகிய 1முதல் 4 மனுதாரர்களை அசல் வழக்கில் 2 முதல் 5 வாதிகளாக சேர்த்துக்கொண்டு அசல் வழக்கை மேல் நடத்த உத்தரவிடக்கோரி வாரிசு மனுவானது, 2ம் மனுதாரரின் தகப்பனாரான பட்டாணி இறந்த 08.03.2019ம் தேதியிலிருந்து 90 நாட்களுக்குள் கொடுக்கவேண்டும். ஆனால், பட்டாணி வழக்கு நடத்திய விபரம் வழக்கறிஞர் அலுவலகத்தை தொடர்புகொண்டபிறகு தான் தாமதமாகத்தான் தெரியவந்தது. எனவே, வாரிசு மனு தாக்கல் செய்வதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது. எனவே, இறந்த வாதிக்கு 90 நாட்களுக்குள் வாரிசு மனு கொடுக்காததால் ஏற்பட்டுள்ள அபேட்மெண்ட் உத்தரவை ரத்து செய்து உத்தரவிடக்கோரி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. 1ம் <u>எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட</u>

<u>எதிருரையின் சுருக்கம்</u> :-(<u>2ம் எதிர்மனுதாரர் தனதாக ஏற்றுக்கொள்கிறார்</u>)

மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவானது சட்டப்படிக்கும், உண்மை

நிலவரப்படிக்கும் நிலை நிற்கக்கூடியதல்ல. எதிர்மனுதாரர்கள் ஒப்புக்கொள்ளப்படுகின்ற சங்கதிகளை தவிர மற்றவற்றை மனுதாரரே நிரூபிக்கவேண்டும். இந்த மனுவினை காலதாமதப்படுத்தவேண்டும் என்ற கெட்ட நோக்கத்தில் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனு தாக்கல் செய்வதற்கு உரிய காலத்தில் செய்யாமல் வேண்டுமென்றே பல நாட்கள் கழித்து வேண்டுமென்றே வழக்கினை இழுத்தடிக்கும் நோக்கத்தில் செயல்பட்டு விட்டு, எதிர்மனுதாரர்களுக்கு கஷ்ட நஷ்டத்தை ஏற்படுத்தி அதன் மூலம் துர்லாபம் அடையவேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் எதிர்மனுதாரர்களுக்கு யாதொரு நீதியும் பலனும் கிடைத்துவிடக்கூடாது என்ற கெட்ட நோக்கத்தில் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே, இம்மனுவினை தள்ளுபடி செய்யவேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4.** மனுதாரர் தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர், அசல் வழக்கானது நிலுவையிலிருக்கும்போது 2ம் மனுதாரரின் தகப்பனார் பட்டாணி 08.03.2019 ம் தேதியன்று காலமாகிவிட்டார் என்றும், அவரது மனைவியான சுந்தரம்பாள், 2ம் மனுதாரர் மற்றும் 3,4 மனுதாரர்கள் ஆகியோர்கள் சட்டப்படி வாரிசுகள் ஆவார்கள் என்றும், இவர்களை தவிர வேறு வாரிசுகள் யாரும்கிடையாது என்றும், வாரிசு மனு தாக்கல் செய்வதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது. எனவே, இறந்த வாதிக்கு 90 நாட்களுக்குள் வாரிசு மனு கொடுக்காததால் ஏற்பட்டுள்ள அபேட்மெண்ட் உத்தரவை ரத்து செய்து உத்தரவிடவேண்டும் என்றும் வாதிட்டார்.

**5.** எதிர்மனுதாரர்கள் தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர், இந்த மனுவினை காலதாமதப்படுத்தவேண்டும் என்ற கெட்ட நோக்கத்தில் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மனு தாக்கல் செய்வதற்கு உரிய காலத்தில் செய்யாமல் வேண்டுமென்றே பல நாட்கள் கழித்து வேண்டுமென்றே வழக்கினை

இழுத்தடிக்கும் நோக்கத்தில் செயல்பட்டு விட்டு, எதிர்மனுதாரர்களுக்கு கஷ்ட நஷ்டத்தை ஏற்படுத்தி அதன் மூலம் துர்லாபம் அடையவேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் எதிர்மனுதாரர்களுக்கு யாதொரு நீதியும் பலனும் கிடைத்துவிடக்கூடாது என்ற கெட்ட நோக்கத்தில் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே, இம்மனுவினை தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் வாதிட்டார்.

**6. இம்மனுவில் தீர்வுக்காணப்படவேண்டிய பிரச்சனை யாதெனில்,**

**இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.**

**<u>பிரச்சினை</u>:-**

**1.** இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது. மனு, அபிடவிட், எதிருரை, மற்றும் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

**2.** இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**3.** அசல் வழக்கானது வாதியின் சட்டப்படியான உரிமையிலும், அமைதியான அனுபவத்திலும் இருந்து வரும் தாவா சொத்தில் 1,2 பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ, முகவர்களோ எந்த வகையிலும் அத்துமீறி பிரவேசிக்காமல் இருக்கும்பொருட்டு நிரந்தர உறுத்துகட்டளைப்பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டு, எழுவினாக்கள் வனையப்பட்டு இருதரப்பு விசாரணைக்காகப்போடப்பட்டிருந்தபோது, வாதிஇறந்துவிட்டதால் அவரது வாரிசுகளை 2 முதல் 5 வாதிகளாக சேர்க்கக்கோரி இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4.** இம்மனுவினை பரிசீலிக்கையில், அசல் வழக்கானது இறந்த வாதியால் பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி அசல் வழக்கு நிலுவையில் உள்ள சமயத்தில், வாதி

பட்டாணி என்பவர் 08.03.2019 ம் தேதியன்று இறந்தவிட்டதால், 90 நாட்களுக்குள் வாரிசு மனு கொடுக்காததால் ஏற்பட்டுள்ள அபேட்மெண்ட் உத்தரவை ரத்து செய்ய வேண்டும் என்று இந்த மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் கடுமையான ஆட்சேபணை எதுவும் தெரிவிக்கவில்லை. இம்மனுவைப் பொறுத்தவரை மனுதாரர்கள்/வாதிகள் இம்மனுவில் 90 நாட்கள் காலதாமதத்திற்கு கூறும் காரணங்கள் ஏற்புடையவையா என்று கவனமாக பரிசீலிக்கையில், இறந்த வாதி பட்டாணி அசல் வழக்கு தாக்கல் செய்திருக்கும் விபரம் தற்போது தான் தெரியவந்தது என்றும், அதனால் கெடுவில் வாரிசுமனு தாக்கல் செய்ய இயலவில்லை என்றும் தற்போது ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளதை இந்நீதிமன்றம் கவனத்திற்கொள்கிறது. மேலும், இம்மனுவினை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எவ்வித இழப்பும் ஏற்படபோவதில்லை. மனுதாரர்கள்/வாதிகளுக்கு ஒரு வாய்ப்பு வழங்குவதே நீதியின் நலனுக்கு உகந்ததானதாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**முடிவில்,** இம்மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் நேரடியாக கணினியில் சொல்லப்பட்டு, சுருக்கெழுத்தரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு திறந்த இந்நீதிமன்றத்தில் இன்று ( 28.09.2021) அவையறியப்பகரப்பட்டது.

( S/d. C. Kalaivani.,)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி.

**விசாரிக்கப்பட்ட சாட்சிகள் மற்றும் குறியிடப்பட்ட சான்றாவணங்கள்:-**

**இரு தரப்பிலும்** : இல்லை

( S/d. C. Kalaivani.,)

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

மன்னார்குடி.